**இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனம் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, வருமானம் மற்றும் செலவின கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தியமைக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் பிரிவு 21 அ வின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சம்மேளனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எ.்.ப்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்வு விடயப்பரப்பு பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எ.்.ப்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில்

அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | பரிந்துரை |
|---|---|---|
| சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், கூட்டுமொத்தம் ரூபா 3,176,663 ஆனது சம்மேளனத்திடமிருந்து பெறவேண்டியதாக காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், சம்மேளனத்தின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகையானது ரூபா 987,449 ஆக இருந்தது. எனவே, இரு மீதிகளுக்குமிடையே ரூபா 2,189,214 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | அத் தொகையானது விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் எங்களுக்காக செலுத்த வேண்டியதாக நான் குறிப்பிட்டுள்ளேன். | சம்மேளனமானது இவ் விடயத்தினை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சரியான தொகை நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூலச் சான்றுகள்

| உருப்படி | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு<br><br>பாடசாலை கரப்பந்தாட்ட சங்கங்களிற்கான கொடுப்பனவுகள் | 1,256,988<br><br>2,250,000<br>--------------<br>3,506,988 | உறுதிச்சீட்டுக்கள், பட்டியல்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய துணை ஆவணங்கள். | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | கணக்காய்வில் திருப்திகரமான வவுச்சிங்கிற்கு அல்லது அக் கொடுக்கல் வாங்கல்களை ஏற்றுக் கொள்வதற்கு, கணக்காய்விற்கு துணை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
### 1.6.1 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| 05 வருடங்களிற்கு மேலாக செலுத்த வேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 3,235,699 ஆனது இவ் அறிக்கைத் திகதியில் உள்ளவாறு கூட கொடுத்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | காணப்படும் மீதிகளானது சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டிடத் தொகுதி அதிகாரசபை மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் என்பனவற்றின் மீதிகள் என குறிப்பிட்டுள்ளேன். | செலுத்த வேண்டியவைகளை கொடுத்துத் தீர்க்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டம் மற்றும் அதன் மீது செய்யப்பட்ட திருத்தங்கள் | சம்மேளனமானது அதனது மிகை மீது வருமான வரியினை கணிப்பீடு செய்து உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பவேண்டியிருந்தும், அதன்படி அது செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வருமான வரி செலுத்த வேண்டிய பொறுப்பு உள்ளதா என நான் விசாரணை செய்வேன். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான வரி செலுத்தப்பட வேண்டியதாகும். |
| (ஆ) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2022 மே 31 ஆம் திகதி வெளியிடப்பட்ட | அனைத்து கொடுப்பனவுகளும் வங்கிகள் ஊடாகவே செய்யவேண்டியிருந்தும், அதற்கு முரணாக, மீளாய்வாண்டின் போது சம்மேளனமானது | அக் கொடுக்கல் வாங்கல்களை காசோலைகள் மூலம் செய்வது சாத்தியமில்லை என நான் குறிப்பிட்டுள்ளேன். | சுற்றறிக்கை நிபந்தனைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| 2022/02 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் பந்தி 01 | மொத்தம் ரூபா 4,553,966 ஆன காசு கொடுப்பனவுகளை செய்திருந்தது. எனவே, இக் கொடுப்பனவுகளின் வெளிப்படைத்தன்மையானது கணக்காய்வில் கேள்விக்குறியாக உள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சம்மேளனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,225,206 ஆன குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,170,986 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,396,192 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னய ஆண்டுடன் ஒப்பிடும்போது அனுசரனையாளர்களிடமிருந்தான வருமானம் ரூபா 3,614,796 ஆல் குறைவடைந்திருந்தமையே இப்பின்னடைவிற்கான பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டு நாட்காட்டியின் பிரகாரம், 10 சர்வதேச போட்டிகள் மற்றும் 05 உள்நாட்டு விளையாட்டுப் போட்டிகள் என்பனவற்றை நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் போது 02 உள்நாட்டு விளையாட்டுக்கள் மற்றும் 05 சர்வதேச போட்டிகள் என்பன நடாத்தப்பட்டிருக்கவில்லை. | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் அனுசரணையாளர்கள் போன்றோறிடமிருந்து பங்களிப்பினை பெறமுடியாமை காரணமாக அனைத்து விளையாட்டுக்களிலும் பங்குபற்றவில்லை. | சம்மேளனமானது திட்டமிட்டபடி நிகழ்வுகளினை நடாத்த வேண்டும். |